Government of India
Ministry of Ayush
सत्यमेव जयते

# MINISTRY OF AYUSH COMPILED MEDIA REPORT

18 Dec, 2024 - 20 Dec, 2024

## National Institute of Siddha sets Guinness World Record

### Total Mention 59

| Print | Financial | Mainline | Regional | Periodical |
|---|---|---|---|---|
| 12 | N/A | 3 | 9 | N/A |

| Online |
|---|
| 47 |

## Print

| No | Newspaper | Headline | Edition | Pg |
|---|---|---|---|---|
| 1. | Free Press Journal | Siddha startups | Mumbai | 3 |
| 2. | Deccan Chronicle | NATIONAL INSTITUTE OF SIDDHA SETS RECORD FOR VARMAM THERAPY | Chennai | 9 |
| 3. | Trinity Mirror | Tambaram National Institute of Siddha heading for Guinness World Record | Chennai | 7 |
| 4. | Dina Karan | NATIONAL INSTITUTE OF SIDDHA SETS RECORD FOR VARMAM THERAPY | Chennai | 4 |
| 5. | Dina Karan | NATIONAL INSTITUTE OF SIDDHA SETS RECORD FOR VARMAM THERAPY | Chennai | 15 |
| 6. | Dina Karan | Tambaram National Institute of Siddha heading for Guinness World Record - Intensive Program arrangem... | Chennai | 15 |
| 7. | Dina Malar | NATIONAL INSTITUTE OFSIDDHA SETS RECORD FOR VARMAM THERAPY | Chennai | 2 |
| 8. | Dina Malar | Tambaram National Institute of Siddha heading for Guinness World Record - Intensive Program arrangem... | Chennai | 12 |
| 9. | Dina Mani | NATIONAL INSTITUTE OF SIDDHA SETS RECORD FOR VARMAM THERAPY | Chennai | 4 |
| 10. | Dina Mani | Tambaram National Institute of Siddha heading for Guinness World Record - Intensive Program arrangem... | Chennai | 3 |
| 11. | The Hindu Tamil | Tambaram National Institute of Siddha heading for Guinness World Record - Intensive Program arrangem... | Chennai | 3 |
| 12. | Daily Thanti | Tambaram National Institute of Siddha heading for Guinness World Record - Intensive Program arrangem... | Chennai | 8 |

Free Press Journal • 20 Dec • Ministry of Ayush

## Siddha startups

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 • PG | 27 • Sqcm | 21859 • AVE | 251.68K • Cir | Bottom Center | FP School |

Mumbai

### Siddha startups

Ayush Secretary Vaidya Rajesh Kotecha on Thursday urged for partnerships with IITs to facilitate startup opportunities in Siddha. He gave the call at the 8th Siddha Day celebration on the theme 'Siddha for Public Health', organised at the Anna Centenary Library Auditorium, Kotturpuram, in Chennai.

Deccan Chronicle • 20 Dec • Ministry of Ayush

NATIONAL INSTITUTE OF SIDDHA SETS RECORD FOR VARMAM THERAPY

| 9 • PG | 176 • Sqcm | 310126 • AVE | 1.15M • Cir | Bottom Center |
| --- | --- | --- | --- | --- |

Chennai

# NATIONAL INSTITUTE OF SIDDHA SETS RECORD FOR VARMAM THERAPY

**DC CORRESPONDENT**
CHENNAI:

The National Institute of Siddha (NIS) achieved a milestone setting a Guinness World Record by simultaneously providing Varmam therapy to 555 individuals at the same time, with 555 Varmanis (Varmam healers) performing the therapy.

The event performed as a part of a larger effort to showcase the global relevance and efficacy of Siddha medicine, particularly Varmam therapy, and to honour India's rich healthcare traditions. The event attended by Vaidya Rajesh Kotecha, Secretary, Ministry of AYUSH and Prof. Dr. R. Meenakumari, Director of NIS.

"This Guinness World Record attempt is a message to the world about the efficacy and global relevance of Siddha medicine," said Prof. Dr. R. Meenakumari. "Through this world record attempt, we aim to place Siddha medicine in the global spotlight, inspiring confidence in its therapeutic value." The event integrated traditional healthcare with modern recognition, uniting practitioners, patients, and enthusiasts under one roof. As the world increasingly turns to Indian traditional therapies like Varmam, Siddha medicine stands as a beacon of holistic and drugless healing methods, Dr. Meenakumari noted.

She said, "This event is a tribute to India's rich healthcare traditions and a step forward in showcasing the power of Siddha medicine on a global platform. Siddha Varmam therapy is a timeless healing tradition rooted in ancient wisdom. It harmonizes the body and mind through precise pressure techniques, revitalizing health naturally."

Varmam therapy, a part of the ancient Siddha system of medicine, plays a significant role in pain management and the treatment of various acute and chronic conditions, especially those related to the brain, nervous system, bones, joints, and muscles. Its therapeutic benefits extend to treating stroke, rheumatoid arthritis, and trauma-related injuries. By stimulating vital energy points on the body, Varmam therapy promotes healing, enhances vitality, and restores balance.

Trinity Mirror • 18 Dec • Ministry of Ayush

## Tambaram National Institute of Siddha heading for Guinness World Record

| 7 • PG | 158 • Sqcm | 227666 • AVE | 361.5K • Cir | Top Center |
|---|---|---|---|---|

Chennai

# Tambaram National Institute of Siddha heading for Guinness World Record

Chennai, Dec 17: National Institute of Siddha, an autonomous body under the Ministry of AYUSH Govt. of India is set to mark their name in the Guinness world record with the aim of popularizing Varmam Therapy in Siddha Medicine to the world. Preparations are being made to perform a record by simultaneously providing Varmam therapy to 555 people by 555 varmanis (varmam healers) on December 18th, 2024.

The institute is trying to spread the benefits of Siddha medicine and the virtues of Varmamtherapy throughout the country. In order to promote the same, they are planning to closelywork with the Union Ministry of AYUSH. Shri Prataprao Jadhav, Hon'ble Minister of State (Independent Charge),Ministry of Ayush & Minister of State, Ministry of Health& Family Welfare, Government of India and Thiru Ma. Subramanian, Minister of Health & Family Welfare Govt. of Tamil Nadu will be presided as the chief guests. Shri Vaidya Rajesh Kotecha, Secretary, Ministry of AyushGovt.of India, Tmt Supriya Sahu, Health Secretary, Govt. of Tamil Nadu and The Director of National Institute of Siddha, Prof. Dr. R. Meenakumari will be the present on the occasion.

When the west is moving towards the Indian heritage and is interested in Indian traditional therapy such as Varmam, Ayush and ayurvedic, our present generation is influenced by western culture, tradition and food and moving towards those. This event is to showcase the history that Tamil Nadu has in this Varmam Therapy.

Dina Karan • 20 Dec • Ministry of Ayush

# NATIONAL INSTITUTE OF SIDDHA SETS RECORD FOR VARMAM THERAPY

| 4 • PG | 105 • Sqcm | 133644 • AVE | 1.45M • Cir | Bottom Right |
|---|---|---|---|---|

Chennai

## மாணவர்களுக்கு சான்றிதழ்.




கோட்டூர்புரம் அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் 8வது சித்த மருத்துவ திருநாள் விழா நடந்தது. இதில், இந்திய அரசின் ஆயுஷ் அமைச்சகத்தின் செயலர் வைத்திய ராஜேஷ் கொட்டேச்சா கலந்துகொண்டு பல்கலை தர வரிசையில் முதல் மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கினார். அருகில், மத்திய சித்த மருத்துவ ஆராய்ச்சி குழுமத்தின் பொது இயக்குனர் முத்துக்குமார், மருத்துவர் ராமன் மோகன் சிங், பேராசிரியர் பார்த்திபன் மற்றும் டாக்டர்கள்.

Dina Karan • 20 Dec • Ministry of Ayush

## NATIONAL INSTITUTE OF SIDDHA SETS RECORD FOR VARMAM THERAPY

| 15 • PG | 68 • Sqcm | 86796 • AVE | 1.45M • Cir | Bottom Right |
|---|---|---|---|---|

Chennai

# சித்த மருத்துவம் பற்றி விழிப்புணர்வு முகாம்

திருவொற்றியூர், டிச.20: சென்னை மாநகராட்சி, மணலி ஆரம்ப சுகாதார மைய சித்த மருத்துவ பிரிவு சார்பில், 7ம் ஆண்டு சித்தர் திருநாளை முன்னிட்டு சித்த மருத்துவம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி பாடசாலை தெருவில் உள்ள சித்த மருத்துவமனையில் நடந்தது. சித்த மருத்துவர் சரண்யா ஷாலினி தலைமை வகித்தார். நோயில்லா வாழ்வில் உணவு முறைகள் குறித்தும் பல்வேறு நோய்களுக்கு சித்த மருத்துவத்தில் உள்ள பயன்கள் குறித்தும் முகாமில் பங்கேற்ற அரசு பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு விளக்கப்பட்டது. அப்போது மூலிகை மருந்துகள் செடிகள், சிறுதானியங்கள் கண்காட்சிக்கு வைக்கப்பட்டது. முன்னதாக சித்தரின் படத்திற்கு மலர்தூவி மாலை அணிவித்து வணங்கினர். தொடர்ந்து மூலிகை தொடர்பான புத்தகங்கள் மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் மருத்துவர்கள் தனுஷ் அபிநயா, மோனிகா மற்றும் மருந்தாளுனர்கள், பொதுமக்கள் உள்பட பல பங்கேற்றனர்.

Dina Karan • 19 Dec • Ministry of Ayush

# Tambaram National Institute of Siddha heading for Guinness World Record - Intensive Program arrangem...

| | | | | |
|---|---|---|---|---|
| 15 • PG | 345 • Sqcm | 440016 • AVE | 1.45M • Cir | Top Right |

Chennai

தாம்பரம் தேசிய சித்த மருத்துவ நிறுவனத்தில்

## ஒரே நேரத்தில் 555 பேருக்கு 555 வர்ம சிகிச்சையாளர் சிகிச்சை

### கின்னஸ் சாதனையில் இடம்பிடித்தது



தாம்பரம் சானடோரியம் தேசிய சித்த மருத்துவமனையில் கின்னஸ் சாதனைக்காக ஒரே நேரத்தில் 555 பேருக்கு 555 வர்ம சிகிச்சையாளர்கள் சிகிச்சை அளித்தனர்.

தாம்பரம், டிச. 19: தாம்பரம் சானடோரியம் பகுதியில் உள்ள தேசிய சித்த நிறுவனத்தில் சர்வதேச அளவில் கின்னஸ் சாதனை படைப்பதற்காக ஒரே நேரத்தில் 555 பேருக்கு 555 வர்ம சிகிச்சையாளர்கள் மூலம் சிகிச்சை அளித்து உலக சாதனை நிகழ்ச்சி நேற்று நடந்தது. மத்திய ஆயுஷ் துறை செயலாளர் ஸ்ரீ வைத்யா ராஜேஷ் கோடச்சே கலந்துகொண்டார். இதை உலக சாதனையாக கின்னஸ் உலக சாதனை அமைப்பால் அங்கீகரிக்கப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.

இந்த கின்னஸ் உலக சாதனை நிகழ்ச்சியின் மூலம் சித்த மருத்துவத்தை உலக அளவில் கொண்டு செல்வதும் சித்த மருத்துவத்தின் சிகிச்சைகளை நம்பிக்கை உரியதாக கொண்டு செல்வதும் நோக்கம் என தெரிவித்துள்ளனர்.

இந்த நிகழ்ச்சி தொடர்பாக தாம்பரம் தேசிய சித்த மருத்துவ நிறுவனத்தின் இயக்குனர் மீனாகுமாரி செய்தியாளர்களை சந்தித்து பேசினார். அவர் கூறியதாவது:

தேசிய சித்த மருத்துவமனை தாம்பரத்தில் 2005 முதல் செயல்பட்டு வருகிறது. சித்த முறையானது தமிழ் மருத்துவ முறையாக 5000 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில் இருந்தே உள்ளது. இது மட்டுமின்றி மிக முக்கியமான சித்தர்களான போகர், அகத்தியர், திருமூலர் போன்ற சித்தர்களின் வாயிலாக இந்த மருத்துவம் தமிழ் மக்களுக்கு போதிக்கப்பட்டுள்ளது. அந்த காலத்தில் இந்தியா முழுமைக்கும் இந்த மருத்துவம் பயன்பாட்டில் இருந்தது. மக்களை மேம்படுத்தவும் நோயிலிருந்து காப்பாற்றவும் இந்த மருத்துவ முறை பயன்படுத்தப்பட்டுள்ளது.

தற்போது இந்த மருத்துவத்தை மாற்றும் மருத்துவ முறையாகவும் கொரோனாவின் போது மிகப்பெரிய நாட்டு மருத்துவமாக சித்த மருத்துவம் பயன்பட்டது. கபசுர குடிநீர், நில வேம்பு குடிநீர் போன்ற எளிய மருந்துகள் மூலமாக சவாலான நாட்களை சந்தித்தோம்.

அதுபோன்று உலகம் முழுவதும் இந்த மருத்துவத்தை பரப்பும் விதமாக சித்த மருத்துவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து இன்று 1810 பேர் கின்னஸ் வேர்ல்டு ரெக்கார்டில் இடம் பெற்றுள்ளோம்.

இந்த மருத்துவ முறை சித்த மருத்துவத்திற்கு உரியதானது. இது பழமையான ஓலை சுவடிகள் மூலம் தமிழில் உள்ள பழமையான நூல்கள், ஓலைச்சுவடிகள், செப்பேடு போன்ற பழைய குறிப்புகளில் இருந்து எடுக்கப்பட்டுள்ளது. தற்போது கேரள மற்றும் கன்னியாகுமரி பகுதிகளில் இந்த மருத்துவ முறை அதிக அளவில் பிரபலமாக அறியப்படுகிறது. இப்பொழுது இதை சிகிச்சை முறைக்காக அறிவியல் பூர்வமாக எடுத்து வந்துள்ளோம்.

இதில் நரம்பியல் சம்பந்தமான சிக்கலான நோய்கள், எலும்பு மற்றும் முட்டு சம்பந்தமான நோய்கள், தசை சம்பந்தமான நோய்களுக்கு சிகிச்சைகள் அலோபதி முறையில் சவாலாக உள்ளது.

இதை சித்த மருத்துவத்தில் நாம் கடைபிடித்துக் கொண்டிருக்கிறோம். முக்கியமாக உயிர் சக்தியை சமநிலைப்படுத்துவது தான் இந்த வர்ம சிகிச்சை. உடலில் இருக்கக்கூடிய ஐம்பூதங்களின் கூறுகளை வைத்து சமநிலைப்படுத்தி அறிவியல் பூர்வமாக இதை கூறுவதாக இருந்தால் எலக்ட்ரோ மேக்னடிக் நமது உடம்பில் உள்ளது. அதற்கு காரணமான டிரான்ஸ்மீட்டர் உடம்பில் செயல்பாடுகளை சமநிலைப்படுத்தவும் கழிவு பொருட்களை நீக்கவும் இதை பயன்படுத்திக் கொள்கிறோம்.

கின்னஸ் உலக சாதனை படைப்பதற்காக 555 மருத்துவர்கள் 555 பயனாளிகள் வர்ம புள்ளிகளில் அழுத்தம் கொடுத்து சிகிச்சை முறைகளை செய்து சாதனை படைத்தனர். இவ்வாறு அவர் கூறினார்.

Dina Malar • 20 Dec • Ministry of Ayush

# NATIONAL INSTITUTE OFSIDDHA SETS RECORD FOR VARMAM THERAPY

| 2 • PG | 322 • Sqcm | 277046 • AVE | 882.2K • Cir | Bottom Center |
|---|---|---|---|---|

Chennai

# சித்த மருந்துகள் செய்முறைக்கு கூடுதலாக 72 புத்தகங்கள்

## மத்திய ஆயுஷ் செயலர் உறுதி



■ சென்னையில் நடந்த எட்டாவது தேசிய சித்த மருத்துவ தின விழாவில், சித்த மருந்துகள் செய்முறை குறித்த நூலை வெளியிட்ட மத்திய அரசின் ஆயுஷ் துறை செயலர் வைத்திய ராஜேஷ் கோட்டெச்சா. உடன் இடமிருந்து: மத்திய சித்த மருத்துவ ஆராய்ச்சி குழுமத்தின் பொது இயக்குனர் முத்துகுமார், இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதிக்கான பார்மகோபோயா கமிஷன் இயக்குனர் ராமன் மோகன் சிங், தமிழக இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி துறை இணை இயக்குனர் பார்த்திபன். இடம்: கோட்டூர்புரம்.

**சென்னை, டிச. 20–**

''சித்த மருந்து செய்முறைகளுக்கு கூடுதலாக, 72 புத்தகங்கள் இணைக்கப்படுவதன் வாயிலாக, புதிய மருந்துகள் தயாரிக்கப்படும்,'' என, மத்திய ஆயுஷ் அமைச்சக செயலர் வைத்திய ராஜேஷ் கோட்டெச்சா தெரிவித்தார்.

மத்திய சித்த மருத்துவ ஆராய்ச்சி குழுமம், தேசிய சித்த மருத்துவ நிறுவனம், தமிழக அரசின் இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி துறை ஆகியவற்றின் சார்பில், எட்டாவது தேசிய சித்த மருத்துவ தினம், சென்னை கோட்டூர்புரத்தில் உள்ள அண்ணா நுாற்றாண்டு நுாலகத்தில் நேற்று கொண்டாடப்பட்டது.

இதில், மத்திய ஆயுஷ் துறை அமைச்சர் பிரதாப்ராவ் ஜாதவ், 'வீடியோ கான்பரன்ஸ்' வழியாக பேசுகையில், ''மத்திய அரசு, இந்திய மருத்துவ முறைகளுக்காக தனி அமைச்சகத்தை உருவாக்கி உள்ளது.

''கொரோனா பெருந்தொற்று காலத்தில், மக்களின் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க, சித்த மருத்துவ முறைகள் மிகுந்த பயன் அளித்தன. தேசிய ஆயுஷ் இயக்கத்தை, தமிழக அரசு சிறப்பாக செயல்படுத்தி வருகிறது,'' என்றார்.

தமிழக இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி துறை இணை இயக்குனர் பார்த்திபன் பேசுகையில், ''சித்த மருந்துகளின் செய்முறைகளுக்கு, 27 புத்தகங்கள் மட்டுமே உள்ளன. அவற்றில் சித்தர்கள் கொடுத்துள்ள வழிமுறைகளின்படி, கூடுதலாக 72 மருந்து செய்முறை புத்தகங்களை இணைத்தால், பல நோய்களுக்கு புதிய மருந்துகள் தயாரிக்க முடியும்.

''மேலும், சித்த மருந்துகளுக்கு, ஆயுஷ் துறை மற்றும் உணவு பாதுகாப்பு துறை அனுமதி அளிக்கிறது. அந்த மருந்துகளுக்கு, ஒரே மாதிரியான அனுமதி என்ற முறையில், தேசிய மருத்துவ சட்டத்தை மத்திய அரசு இயற்ற வேண்டும்,'' என்றார்.

நிகழ்ச்சியில், மத்திய ஆயுஷ் அமைச்சக செயலர் வைத்திய ராஜேஷ் கோட்டெச்சா பேசியதாவது:

சித்தா மருத்துவ கல்வி, ஆராய்ச்சி ஆகியவற்றில் தமிழகம் முன்னோடி மாநிலமாக திகழ்கிறது. நாட்டில், 900க்கும் மேற்பட்ட ஆயுஷ் புத்தொழில் நிறுவனங்கள் செயல்படுகின்றன. பிரதமர் மோடி தலைமையில் இத்துறை சிறப்பான வளர்ச்சியை பெற்றுள்ளது.

கிராமப் பகுதிகளில் 90 சதவீத மக்கள், நகர்ப்புறங்களில் 95 சதவீத மக்கள், ஆயுஷ் மருத்துவத்தை நன்கு அறிந்துள்ளனர்.

இவர்களில் 50 சதவீதம் பேர், ஆயுஷ் மருத்துவ முறையை பயன்படுத்துகின்றனர். ஆயுஷ் மருத்துவ முறைகளின் பயன்களை பெற, 22 செயலிகள் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளன.

சித்த மருந்து செய்முறையில் கூடுதலாக, 72 புத்தகங்கள் இணைக்கப்படும். அதன் வாயிலாக, புதிய மருந்து தயாரிப்புகளும் உருவாகும். சித்த மருந்துகளை, மத்திய மருத்துவ சட்டத்தின் கீழ் கொண்டு வருவது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அவர் பேசினார்.

Dina Malar • 19 Dec • Ministry of Ayush

# Tambaram National Institute of Siddha heading for Guinness World Record - Intensive Program arrangem...

| 12 • PG | 137 • Sqcm | 117730 • AVE | 882.2K • Cir | Top Right |
|---|---|---|---|---|

Chennai

## 555 பேருக்கு வர்ம சிகிச்சை சித்தா நிறுவனம் சாதனை



தாம்பரத்தில் உள்ள தேசிய சித்த மருத்துவ நிறுவனத்தில் ஒரே நேரத்தில் 555 பேருக்கு 555 வர்ம சிகிச்சையாளர்கள் சிகிச்சை அளிக்கும் கின்னஸ் உலக சாதனை நடத்தினர்.

**தாம்பரம், டிச. 19–**

வர்மக்கலை என்பது அடிமுறை தாக்குதலுக்கான பயிற்சியாக அனைவரும் அறிந்திருந்தாலும், தீவிர நோய்களுக்கான சிகிச்சை முறையாகவும், சித்த மருத்துவத்தில் பயன்பாட்டில் உள்ளது.

மருந்தில்லா மருத்துவ வழிமுறையாக, வலிகளுக்கான மருத்துவமாக 'வர்மம்' பங்காற்றுகிறது. மூளை, நரம்பு மண்டலம் சார்ந்த நோய்களான பக்கவாதம், முடக்கு வாதம் முதலான நோய்களுக்கும், எலும்பு, சதை, மூட்டு சார்ந்த நோய்களுக்கும், பெரிதும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

நாட்டின் தென்கோடியில் உள்ள சில இடங்களில் மட்டுமே வழக்கில் இருக்கும் வர்ம மருத்துவ முறை, உலக மக்கள் அனைவருக்கும் பயனளிக்கும் வகையில், நேற்று சித்த மருத்துவ நிறுவனம், ஒரே நேரத்தில், 555 பேருக்கு வர்ம சிகிச்சை அளித்து, 'கின்னஸ்' சாதனை நிகழ்த்தியது.

இதில், ஆயுஷ் அமைச்சகத்தின் செயலர் வைத்திய ராஜேஷ் கொட்டேசா, சித்த மருத்துவ நிறுவன இயக்குனர் மீனாகுமாரி உள்ளிட்டோர் பங்கேற்றனர். தொடர்ந்து, கின்னஸ் நிறுவன பிரதிநிதி வில்லியம் ராபர்ட், கின்னஸ் சாதனை சான்றிதழ் வழங்கினார்.

Dina Mani • 20 Dec • Ministry of Ayush

## NATIONAL INSTITUTE OF SIDDHA SETS RECORD FOR VARMAM THERAPY

| 4 • PG | 175 • Sqcm | 74409 • AVE | 167.26K • Cir | Bottom Right |
|---|---|---|---|---|

Chennai

# ஆயுஷ் மருத்துவத் திட்டங்கள்: தமிழகத்துக்கு மத்திய அரசு பாராட்டு

**சென்னை, டிச. 19:** ஆயுஷ் மருத்துவத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் தமிழகம் சிறந்து விளங்குவதாக மத்திய ஆயுஷ் அமைச்சர் பிரதாப்ராவ் ஜாதவ் பாராட்டு தெரிவித்துள்ளார்.

மத்திய சித்த மருத்துவ ஆராய்ச்சிக் குழுமம், தேசிய சித்த மருத்துவ நிறுவனம், இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி இயக்குநரகம் சார்பில் 8-ஆவது தேசிய சித்த மருத்துவ தின விழா சென்னை கோட்டூர்புரத்தில் உள்ள அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில், ஆயுஷ் அமைச்சகத்தின் செயலர் வைத்திய ராஜேஷ் கோட்டேச்சா, மத்திய சித்த மருத்துவ ஆராய்ச்சி குழுமத்தின் தலைமை இயக்குநர் என்.ஜே.முத்துக்குமார், சித்த மருத்துவ வல்லுநர்கள், சித்த மருத்துவப் பேராசிரியர்கள், ஆராய்ச்சியாளர்கள், சித்த மருத்துவ மாணவர்கள் உள்ளிட்ட 1,600-க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

சித்த மருந்துகள் செய்முறை குறிப்பு நூலின் 3-ஆவது பாகம் (தமிழ்), 8-ஆவது சித்த மருத்துவ தின விழா மலர் ஆகியவற்றை ஆயுஷ் துறை செயலர் வைத்திய ராஜேஷ் கோட்டேச்சா வெளியிட்டார்.

தொடர்ந்து, மத்திய அரசின் சிறு ஆராய்ச்சி திட்டத்தில் வெற்றி பெற்ற 10 இளநிலை சித்த மருத்துவ மாணவர்களுக்கு தலா ரூ. 20,000, 5 முதுநிலை மாணவர்களுக்கு தலா ரூ.30,000 என ஆராய்ச்சி உதவித் தொகையையும் பல்கலைக்கழக அளவில் சிறப்பிடம் பெற்ற மாணவர்களுக்கு பதக்கங்களையும் பாராட்டு சான்றிதழ்களையும் அவர் வழங்கினார்.

அப்போது அவர் பேசியதாவது:

சித்த மருத்துவக் கல்வி, ஆராய்ச்சி ஆகியவற்றில் தமிழகம் முன்னோடி மாநிலமாக திகழ்கிறது. நாட்டில் 900-க்கும் மேற்பட்ட ஆயுஷ் புத்தொழில் நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த துறை பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் சிறப்பான வளர்ச்சியைக் கண்டுள்ளது.

**ஆயுஷ் மருத்துவமுறை:** கிராமப் பகுதிகளில் 90 சதவீத மக்களும், நகர்ப்புறங்களில் 95 சதவீத மக்களும் ஆயுஷ் மருத்துவத்தைப் பற்றி நன்கு அறிந்திருக்கின்றனர். இவர்களில் 50 சதவீதம் பேர் ஆயுஷ் மருத்துவ முறைகளைப் பயன்படுத்தி வருகின்றனர். ஆயுஷ் மருத்துவ முறைகளின் பயன்களைப் பெற 22 செயலிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன என்றார் அவர்.

இந்த நிகழ்வில், மத்திய ஆயுஷ் துறை இணை அமைச்சர் பிரதாப்மராவ் ஜாதவ் காணொலி வாயிலாக நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.

அப்போது அவர் பேசுகையில், 'கரோனா பெருந்தொற்று காலத்தில் மக்களின் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க சித்த மருத்துவ முறைகளின் பயன்பாடு இன்றியமையாததாக இருந்தது. தேசிய ஆயுஷ் இயக்கத்தை தமிழ்நாடு அரசு சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது' என்றார் அவர்.

Dina Mani • 19 Dec • Ministry of Ayush

# Tambaram National Institute of Siddha heading for Guinness World Record - Intensive Program arrangem...

| | | | | |
|---|---|---|---|---|
| 3 • PG | 100 • Sqcm | 42495 • AVE | 167.26K • Cir | Top Right |

Chennai



கின்னஸ் சாதனை...

தாம்பரம் சானடோரியம்
தேசிய சித்த மருத்துவமனையில்
புதன்கிழமை ஒரே நேரத்தில்
555 பேருக்கு
555 வர்ம சிகிச்சைகள் அளித்து
கின்னஸ் உலக சாதனை
நிகழ்த்தியதற்கான
சான்றிதழை மத்திய
ஆயுஷ் அமைச்சகச் செயலர்
ஸ்ரீ வைத்யா ராஜேஷ்
கோடேச்சாவிடம் வழங்கிய
கின்னஸ் சாதனை
நிறுவன அதிகாரி
வில்லியம் ரிச்சர்ட்,
சித்த மருத்துவ நிறுவன
இயக்குநர் ஆர்.மீனாகுமாரி.

The Hindu Tamil • 19 Dec • Ministry of Ayush

# Tambaram National Institute of Siddha heading for Guinness World Record - Intensive Program arrangem...

3 • PG | 442 • Sqcm | 1304418 • AVE | 416.52K • Cir | Bottom Center

Chennai





ஒரே நேரத்தில் 555 பேருக்கு 555 வர்ம சிகிச்சையாளர்கள் சிகிச்சை அளிக்கும் கின்னஸ் உலக சாதனை, தாம்பரம் தேசிய சித்த மருத்துவ நிறுவனத்தில் நேற்று நடந்தது. நிகழ்வின் இறுதியில் கின்னஸ் நிறுவனத்தின் சார்பில் கலந்து கொண்ட ரிச்சர்ட் வில்லியம், ஆயுஷ் அமைச்சகத்தின் செயலாளர் வைத்யா ராஜேஷ் கொட்டேசா, தேசிய சித்த மருத்துவ நிறுவனத்தின் இயக்குநர் மீனாகுமாரி ஆகியோரிடம் விருதை வழங்கினார். படங்கள்: எம்.முத்துகணேஷ்

### ஒரே நேரத்தில் 555 பேருக்கு வர்ம சிகிச்சை அளித்து

## தேசிய சித்த மருத்துவமனை கின்னஸ் சாதனை

**சென்னை**

ஒரே நேரத்தில் 555 வர்ம சிகிச்சை நிபுணர்களை கொண்டு 555 பேருக்கு வர்ம சிகிச்சை அளித்து தேசிய சித்த மருத்துவமனை கின்னஸ் சாதனை படைத்துள்ளது.

சித்த மருத்துவத்தின் வர்ம மருத்துவ சிறப்புகளை உலகறிய செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு, தாம்பரம் சானடோரியத்தில் உள்ள தேசிய சித்த மருத்துவ நிறுவனம் (மருத்துவமனை) பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறது. அதன்படி, நேற்று மருத்துவமனையில் ஒரே நேரத்தில் 555 வர்மானிகளை (வர்ம சிகிச்சை நிபுணர்கள்) கொண்டு 555 பேருக்கு தற்காப்பு வர்ம மருத்துவப் பரிகாரத்தை வழங்கி சாதனை படைத்துள்ளது.

கின்னஸ் நிறுவன பிரதிநிதி ரிச்சர்ட் வில்லியம், கின்னஸ் சாதனை சான்றிதழ் வழங்கினார். மருத்துவ நிறுவனத்தின் இயக்குநர் மருத்துவர் ஆர்.மீனாகுமாரி தலைமையில் நடைபெற்ற இந்த கின்னஸ் சாதனை நிகழ்வில் மத்திய ஆயுஷ் அமைச்சகத்தின் செயலாளர் வைத்யா ராஜேஷ் கொட்டேசா சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார். மருத்துவ நிறுவனத்தின் மூன் மருத்துவர் எம். மீனாட்சி சுந்தரம், கண்காணிப்பாளர் மருத்துவர் கிறிஸ்டியன் உள்ளிட்டோர் நிகழ்வில் பங்கேற்றனர்.

மருத்துவ நிறுவனத்தின் இயக்குநர் மருத்துவர் ஆர்.மீனாகுமாரி கூறியதாவது:

இந்திய மருத்துவ முறைகளில் ஒன்றான சித்த மருத்துவமானது, சித்தர்களின் நுட்பமான, தனித்துவமான மேம்பட்ட பாரம்பரிய மருத்துவமாகும். சித்த மருத்துவத்தின் தனித்துவமான முறைகளாக விளங்கக்கூடிய காயகற்பம், வர்மம், தொக்கணம் போன்றவை அதன் மகத்துவத்தையும், தொன்மையையும் பறை சாற்றுகின்றன. சித்த மருத்துவத்தில் உடனடித் தீர்வாக பயன்படுத்தப்பட்ட ஓர் அற்புதமான மருத்துவ முறைதான் வர்மம்.

வர்மக்கலை அடிமுறை தாக்குதலுக்கான பயிற்சியாக அறியப்பட்டாலும், தீவிர நிலை நோய்களுக்கான சிகிச்சை முறையாக சித்த மருத்துவத்தில் அறிவியல் பின்புலத்தோடு பயன்பாட்டில் இருந்து வருகிறது. மருந்தில்லா மருத்துவ வழிமுறையாக, வலிகளுக்கான மருத்துவமாக இது பெரும் பங்கை வகிக்கிறது.

மூளை, நரம்பு மண்டலம் சார்ந்த நோய்களான பக்கவாதம், முடக்கு வாதம் முதலான நோய்களுக்கும், எலும்பு சதை. மூட்டு சார்ந்த நோய்களுக்கும், வர்மம் பெரிதும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்தியாவின் தென் கோடியில் உள்ள ஒரு சில இடங்களில் மட்டுமே பழக்கத்தில் உள்ள இந்த வர்ம மருத்துவ முறையானது உலக மக்கள் அனைவருக்கும் பயன் அளிக்கக் கூடிய வகையில் வளர வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

[redacted]

Daily Thanti • 19 Dec • Ministry of Ayush

# Tambaram National Institute of Siddha heading for Guinness World Record - Intensive Program arrangem...

| 8 • PG | 298 • Sqcm | 207417 • AVE | 2M • Cir | Bottom Center |
|---|---|---|---|---|

Chennai



தாம்பரம் தேசிய சித்த மருத்துவ நிறுவனத்தில் ஒரே நேரத்தில் 555 பேருக்கு 555 டாக்டர்கள் வர்ம சிகிச்சை அளித்து கின்னஸ் சாதனை நிகழ்த்திய போது எடுத்த படம்.

### தாம்பரம் தேசிய சித்த மருத்துவ நிறுவனத்தில்

# ஒரே நேரத்தில் 555 பேருக்கு டாக்டர்கள் வர்ம சிகிச்சை அளித்து கின்னஸ் சாதனை

தாம்பரம், டிச.19- தாம்பரம் தேசிய சித்த மருத்துவ நிறுவனத்தில் ஒரே நேரத்தில் 555 பேருக்கு 555 டாக்டர்கள் வர்ம சிகிச்சை அளித்து கின்னஸ் சாதனை படைத்துள்ளனர்.

## கின்னஸ் சாதனை

சென்னையை அடுத்த தாம்பரம் சானடோரியத்தில் தேசிய சித்த மருத்துவ நிறுவனம் செயல்பட்டு வருகிறது. இந்த நிறுவனம் சர்வதேச அளவில் கின்னஸ் சாதனை படைப்பதற்காக ஒரே நேரத்தில் 555 பேருக்கு 555 டாக்டர்கள் மூலம் வர்ம சிகிச்சை அளித்து உலக சாதனையை நிகழ்த்தி உள்ளனர்.

தாம்பரம் சித்த மருத்துவமனை நிறுவன வளாகத்தில் நேற்று நிகழ்த்தப்பட்ட இந்த நிகழ்ச்சியில் மத்திய ஆயுஷ் துறை செயலாளர் ஸ்ரீவைத்யா ராஜேஷ் கோடச்சே கலந்து கொண்டார். இதனை உலக சாதனையாக, கின்னஸ் உலக சாதனை அமைப்பால் அங்கீகரிக்கப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.

இந்த கின்னஸ் உலக சாதனை நிகழ்ச்சியின் நோக்கம் சித்த மருத்துவத்தை உலக அளவில் கொண்டு செல்வதும், சித்த மருத்துவ சிகிச்சைகளை நம்பிக்கைக்கு உரியதாக கொண்டு செல்வதுதான் என தெரிவித்தனர்.

இதுபற்றி தாம்பரம் தேசிய சித்த மருத்துவ நிறுவனத்தின் இயக்குனர் டாக்டர் மீனாகுமாரி நிருபர்களிடம் கூறியதாவது:-

## கொரோனா காலத்தில்

தாம்பரத்தில் தேசிய சித்த மருத்துவமனை 2005-ம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. சித்த முறையானது தமிழ் மருத்துவ முறையாக 5 ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில் இந்த மருத்துவ முறை உள்ளது. போகர், அகத்தியர், திருமூலர் போன்ற சித்தர்களின் வாயிலாக இந்த மருத்தும் தமிழ் மக்களுக்கு போதிக்கப்பட்டுள்ளது.

அந்த காலத்தில் இந்தியா முழுமைக்கும் இந்த மருத்துவம் பயன்பாட்டில் இருந்தது. மக்களை மேம்படுத்தவும் நோயிலிருந்து காப்பாற்றவும் இந்த மருத்துவ முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. கொரோனா காலத்திலும் மிகப்பெரிய நாட்டு மருத்துவமாக சித்த மருத்துவம் பயன்பட்டது. கபசுப குடிநீர், நிலவேம்பு குடிநீர் போன்ற எளிய மருந்துகள் மூலமாக சவாலான நாட்களை சந்தித்தோம்.

## 555 டாக்டர்கள்

அது போன்று உலகம் முழுவதும் இந்த மருத்துவத்தை பரப்பும் விதமாக சித்த மருத்துவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து 1,810 பேர் இந்த கின்னஸ் உலக சாதனையில் இடம் பெற்றுள்ளோம்.

தற்போது கேரளா மற்றும் கன்னியாகுமரி பகுதிதனில் இந்த மருத்துவ முறை அதிக அளவில் பிரபலமாக அறியப்படுகிறது. இதை சிகிச்சை முறைக்காக அறிவியல் பூர்வமாக எடுத்து வந்துள்ளோம். இதில் நரம்பியல் சம்பந்தமான சிக்கலான நோய்கள், எலும்பு மற்றும் மூட்டு சம்பந்தமான நோய்கள், தசை சம்பந்தமான நோய்கள் இதற்கான சிகிச்சைகள் அலோபதி முறையில் சவாலாக உள்ளது. இதனை சித்த மருத்துவத்தில் நாம் கடைப்பிடித்துக் கொண்டிருக்கிறோம்.

கின்னஸ் உலக சாதனை படைப்பதற்காக 555 டாக்டர்கள் 555 பேருக்கு வர்ம புள்ளிகளில் அழுத்தம் கொடுக்கும் சிகிச்சை முறைகளை செய்து சாதனை படைத்தனர்.

இவ்வாறு அவர் கூறினார்.

## Online Coverage

| No | Portal Name | Headline (Incorporated with URL) | Reach |
|---|---|---|---|
| 1. | India Today | National Institute of Siddha sets Guinness World Record for Vermam therapy sess i... | 82.4M |
| 2. | Dailyhunt | National Institute of Siddha sets Guinness World Record in Varmam therapy | 18.6M |
| 3. | Dailyhunt | National Institute of Siddha Achieves Guinness Record by Administering Varmam Th... | 18.6M |
| 4. | Dailyhunt | NEET UG 2025 entrance exam latest update every student must know, Union Ed ucatio... | 18.6M |
| 5. | Medical Dialogues | India Launches AYUSH Academic Chairs in 5 Countries to Promote Traditional M edic... | 16M |
| 6. | Medical Dialogues | WHO to observe Ayush Medical Coding and Records Day Annually on January 10 | 16M |
| 7. | Prokerala.com | Must partner with IITs to launch startup opportunities in Siddha: Ayush Secretar... | 13M |
| 8. | ThePrint | National Institute of Siddha gives Varmam therapy to 567 people simultaneously, . .. | 11.3M |
| 9. | Latestly | India News \| National Institute of Siddha Gives Varmam Therapy to 567 People Si m... | 7.8M |
| 10. | PIB | Contribution of Siddha in Natioanl Ayush Mission Commendable – Ayush Secretar y V... | 5.4M |
| 11. | PIB | National Institute of Siddha Sets Guinness World Record for Mass Varmam Thera py | 5.4M |
| 12. | Daijiworld | Must partner with IITs to launch startup opportunities in Siddha: Ayush Secretar... | 3M |
| 13. | Oneindia Hindi | राष्ट्रीय सिद्ध संस्थान ने वर्मम थेरेपी में गिनीज वर्ल्ड रिकॉर्ड बनाया | 2.9M |
| 14. | Current Affairs 2023 | India Promotes AYUSH Systems Globally with New Chairs in Five Countries | 1.4M |
| 15. | Devdiscourse | Guinness Record in Siddha Medicine: Varmam Therapy Spotlight | 1.2M |
| 16. | The Live Nagpur | NEET UG 2025 Latest Update: Major Changes Every Student Must Know, Union Educati... | 580K |
| 17. | Social News XYZ | Must partner with IITs to launch startup opportunities in Siddha: Ayush Secretar... | 415.2K |
| 18. | UNI | TN excels in implementing National AYUSH Mission : Union Min Jadhav | 219.9K |
| 19. | Sakshipost EN | Must partner with IITs to launch startup opportunities in Siddha: Ayush Secretar... | 160.8K |
| 20. | News Drum | National Institute of Siddha gives Varmam therapy to 567 people simultaneously, . .. | 158.4K |
| 21. | Lokmattimes.com | Must partner with IITs to launch startup opportunities in Siddha: Ayush Secretar... | 94.3K |

| | | | |
|---|---|---|---|
| 22. | Storyboard 18 | Govt boosts $18.1 billion ayurveda industry to enhance exports and product quali... | 77.4K |
| 23. | New Kerala | Must partner with IITs to launch startup opportunities in Siddha: Ayush Secretar... | 72K |
| 24. | The News Room | Must partner with IITs to launch startup opportunities in Siddha: Ayush Secretar... | 62.3K |
| 25. | Bhaskar Live | Must partner with IITs to launch startup opportunities in Siddha: Ayush Secretar... | 46.5K |
| 26. | The Rahnuma Daily | Must partner with IITs to launch startup opportunities in Siddha: Ayush Secretar... | 40.1K |
| 27. | ET Government | Promoting Ayush systems of medicine across the world through multiple initiative... | 5K |
| 28. | Vishva Times | Must partner with IITs to launch startup opportunities in Siddha: Ayush Secretar... | N/A |
| 29. | The Samikhsya | National Siddha Day celebrated at CCRS, Chennai | N/A |
| 30. | OB News | Must partner with IITs to launch startup opportunities in Siddha: Ayush Secretar... | N/A |
| 31. | The Mobi World | Must partner with IITs to launch startup opportunities in Siddha: Ayush Secretar... | N/A |
| 32. | Tripurastar News | Contribution Of Siddha In National Ayush Mission Commendable – Ayush Secretary V... | N/A |
| 33. | Daily World | Must partner with IITs to launch startup opportunities in Siddha: Ayush Secretar... | N/A |
| 34. | Newspoint | Must partner with IITs to launch startup opportunities in Siddha: Ayush Secretar... | N/A |
| 35. | Leading Education Portal in India | Search for best preschools, schools and colleges | N/A |
| 36. | Ne India Broadcast | National Institute of Siddha Sets Guinness World Record for Mass Varmam Therapy | N/A |
| 37. | Singrauli Mirror | National Institute of Siddha breaks Guinness World Record with largest ever Varm... | N/A |
| 38. | The Samikhsya | Guinness World Record: NIS Sets for Mass Varmam Therapy | N/A |
| 39. | Ddindia | National Institute of Siddha Breaks Guinness World Record with largest ever Varm... | N/A |
| 40. | Ilouge Media | National Institute of Siddha Sets Guinness World Record with Mass Varmam Therapy | N/A |
| 41. | DD News | National Institute of Siddha breaks Guinness World Record with largest ever Varm... | N/A |
| 42. | Expressnews Asia | National Institute of Siddha Sets Guinness World Record for VarmamTherapy | N/A |
| 43. | Medical Buyer | India's Ayush industry reaches USD 18.1 billion | N/A |
| 44. | The Bengaluru Live | National Institute of Siddha gives Varmam therapy to 567 people simultaneously, ... | N/A |

| | | | |
|---|---|---|---|
| 45. | BharatKi Baat | National Institute of Siddha achieves Guinness record by providing Varmam thera p... | N/A |
| 46. | Observer Voice | National Institute of Siddha Sets Guinness Record | N/A |
| 47. | Reflections | WHO Establishes Ayush Medical Coding and Records Day in India | N/A |